**கவனிக்க.**–*2021.12.03 ஆந் திகதிய 2257 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2258 - 2021 දෙසැම්බර් මස 10 වැනි සිකුරාදා - 2021.12.10

*2258ஆம் இலக்கம் – 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி II – சட்ட சம்பந்தமானது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | 328 |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 329 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.**– *டாக்டர் எஸ். எஸ். குணவர்தன சுதேச ஆயுர்வேத அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, திசெம்பர் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறை நிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

## வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, திசெம்பர் மாதம் 31ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, திசெம்பர் மாதம் 17ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

### 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


327 - B 082295 - 353 (2021/11)

# நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல்

## அறிவித்தல்

*107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்*

கொழும்பு, மேல் நீதிமன்ற வலயத்தினுள், ஆங்கில மொழியில் நொத்தாரிசு கடமையில் கடமையாற்றிய திருமதி ருவந்த்தி தரிணி குணவர்தன அவர்களின் 2018.12.31 ஆந் திகதி தொடக்கம் கடமையின் இராஜினாமா தேசிய பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் இடர் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

ஜெனரல் (ஓய்வு பெற்ற ) கமல் குணரட்ண,
டப்டப்வீ ஆர்டப்பீ ஆர்எஸ்பீ என்டிசீ பீஎஸ்சீ எம்பில்
செயலாளர்,
தேசிய பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும்
அனர்த்த முகாமத்துவ இராஜாங்க அமைச்சு.

கொழும்பு,
2021, யூலை30.

12-318

---

## அறிவித்தல்

*107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்*

கேகாலை, மேல் நீதிமன்ற வலயத்தினுள், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் நொத்தாரிசு கடமையில் கடமையாற்றிய திருமதி தேவிகா சதுராங் கனி ஜயவர்தன அவர்களின் 2020.02.27 திகதி தொடக்கம் கடமையின் இராஜினாமா தேசிய பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் இடர் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

ஜெனரல் (ஓய்வு பெற்ற ) கமல் குணரட்ண,
டப்டப்வீ ஆர்டப்பீ ஆர்எஸ்பீ என்டிசீ பீஎஸ்சீ எம்பில்
செயலாளர்,
தேசிய பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும்
அனர்த்த முகாமத்துவ இராஜாங்க அமைச்சு.

கொழும்பு,
2021, யூலை30.

12-319

---

## அறிவித்தல்

*107 ஆவது அத்தியாயமான நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்*

கேகாலை, மேல் நீதிமன்ற வலயத்தினுள், சிங்களம் மொழியில் நொத்தாரிசு கடமையில் கடமையாற்றிய திரு. தெமட்டயலாகே நிஹால் விக்ரமசிங்க அவர்களின் 2020.12.12ஆந் திகதி தொடக்கம் கடமையின் இராஜினாமா தேசிய பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் இடர் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

ஜெனரல் (ஓய்வு பெற்ற ) கமல் குணரட்ண,
டப்டப்வீ ஆர்டப்பீ ஆர்எஸ்பீ என்டிசீ பீஎஸ்சீ எம்பில்
செயலாளர்,
தேசிய பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும்
அனர்த்த முகாமத்துவ இராஜாங்க அமைச்சு.

கொழும்பு,
2021, யூலை30.

12-320

# நானாவித அறிவித்தல்கள்

## ஒடுக்குதல் அறிவித்தல்

### அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதில் (கொழும்பில் இடம்பெறுகின்ற) மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில்

இல. 10, 5 ஆம் மாடி, கோதமி வீதி, கொழும்பு 08 என்ற முகவரியில் பதிவு செய்த அலுவலகத்தைக் கொண்ட ஒலென்கொம் (பிறைவேட்) லிமிட்டட் (Olancom (Private) Limited) (பீவீ 11036) தொடர்பான விடயம்

வழக்கு இல. : HC(Civil) 84/ 2021/ CO
தன்மை: ஒடுக்குதல்

மற்றும்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பிரிவுக்கு ஏற்பவும் மற்றும் அதன் கீழும் நீதிமன்றத்தின் மூலம் ஒடுக்குதல் செய்வதற்கான விண்ணப்பம் தொடர் பான விடயம்

அம்பியன் ஹோல்டிங்ஸ் பீஎல்சீ
இல. 10, 05 ஆம் மாடி,
கோதமி வீதி,
கொழும்பு 08.

*மனுதாரர்.*

குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பது தொடர்பில் (கொழும்பில் நடைபெறுகின்ற) மேல் மாகாண மேல் நீதிமன்றத்தின் மூலம் மேலே பெயர் குறிப்பிட்ட கம்பனியை ஒடுக்கு வதற்காக மனுவொன்று இல. 10, 05 ஆம் மாடி, கோதமி வீதி, கொழும்பு 08 என்ற முகவரியில் உள்ள அம்பியன் ஹோல்டிங்ஸ் என்ற நிறுவனத்தால் 2021, நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி சொல்லப்பட்ட நீதிமன்றத்துக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதோடு அத்தகைய மனுவை 2022, பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி நீதிமன்றத்தில் விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்டிருக்கிறது என்பதோடு அத்தகைய மனு தொடர்பில் கட்டளையொன்றைப் பிறப்பித்தல் தொடர்பில் ஆதரிப்பதற்கு அல்லது ஆட்சேபிப்பதற்கு விரும்புகின்ற அத்தகைய நிறுவனத்தின் எவரேனும் கடன் கொடுனருக்கு அல்லது பங்களிப்பாளருக்கு அத்தகைய நோக்கத்திற்காக அத்தகைய விசாரணை இடம்பெறுகின்ற சந்தர்ப்பத்தில் தனிப்பட்ட முறையில் அல்லது அவரின் சட்டத்தரணி மூலம் ஆஜராகலாம் என்பதோடு சொல்லப்பட்ட கம்பனியின் எவரேனும் கடன் கொடுனர் அல்லது பங்களிப்புச் செய்பவருக்கு சொல்லப்பட்ட மனுவின் பிரதியொன்று கையொப்பமிடப்பட்டு அதற்கான குறித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தி வேண்டுவதன் மூலம் வழங்கப்படும் என இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

எப். ஜே.என்ட் ஜி டி சேரம்.

216, டி சேரம் பிளேஸ்,
கொழும்பு 10.

**குறிப்பு**: சொல்லப்பட்ட மனு மீதான விசாரணையில் தோன்றுவதற்கு விரும்புகின்ற எவரேனும் ஆள், அவரின் விருப்பத்தை எழுத்து மூலம் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட எப்.ஜே. என்ட் ஜி டி சேரம் நிறுவனத்துக்கு சேர்ப்பிக்க அல்லது தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். அத்தகைய அறிவித்தல் ஆளின் பெயர், முகவரி, அல்லது நிறுவனம் ஒன்றாயின் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி, அல்லது நிறுவனம் ஒன்றாயின் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி என்பவற்றைக் குறிப்பிட்டு குறிப்பிட்ட ஆளினால் அல்லது நிறுவனத்தால் அல்லது அவரின் அல்லது அதன் சட்டத்தரணியால் ( எவரேனும் இருந்தால்) கையொப்பமிட்டு சேர்ப்பிக்க வேண்டும். அல்லது தபால் செய்யப்பட்டால் 2022, பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி மாலை 6.00 மணிக்கு முன்னர் உரிய நேரத்தில் கிடைக்கக் கூடியதாக மேலே பெயர் குறிப்பிட்ட சட்டத்தரணிகள் நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

12- 271

---

### கொழும்பில் நடைபெறும் மேல் மாகாணத்தின் வர்த்தக மேல் நீதிமன்றத்தில் (அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில்)

கொழும்பு 03, காலி வீதி, 255 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியிலும் பிட்டகோட்டே, ஈ.டபிள்யூ. பெரேரா மாவத்தை, 431/ A2ஆம் இலக்கத்திலும் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதும் PB 173 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான என்ட்ரஸ்ட் சிக்கியூரிடீஸ் PLC விடயத்தில்

அத்துடன்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XIIஆம் பாகத்தின் கீழ் நீதிமன்றத்தால் ஒடுக்கப்படுவதற்கான விண்ணப்ப மொன்றின் விடயத்தில்

வழக்கு இல. : 83/2021/CO

அதன்,

பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை நுகேகொட, நாவல வீதி, 168 ஆம் இலக்கத்தில் கொண்டுள்ள எச்என் பி பினான்ஸ் PLC

*மனுதாரர்.*

( அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில்) கொழும்பில் நடைபெறும் மேல் மாகாணத்தின் வர்த்தக நீதிமன்றத்தினால் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட கம்பனியை ஒடுக்குவதற்கான மனுவொன்று, மேற்கூறப்பட்ட மனுதாரரின் சார்பில் சட்டத்தரணி மாலின் ராஜபக்ச அவர்களினால் 2021, நவெம்பர் 01 ஆந் திகதியன்று சொல்லப்பட்ட

நீதிமன்றத்துக்கு முன் வைக்கப்பட்டதென்றும், சொல்லப்பட்ட மனு, 2022, பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதி நீதிமன்றத்தின் முன்னர் கேட்கப்படுவதற்குப் பணிக்கப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

சொல்லப்பட்ட மனு மீதும் கட்டளையொன்று ஆக்கப்படுவ தனை ஆதரிப்பதற்கு அல்லது எதிர்ப்பதற்கு விரும்புகின்ற சொல்லப்பட்ட கம்பனியின் எவரேனும் கடன் கொடுநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் , அந்நோக்கத்துக்காக நேரடியாகவோ அல்லது அவரது சட்டத்தரணி மூலமாகவோ கேட்பு நேரத்தில் தோன்றலாம்: அத்துடன் மனுவின் பிரதியொன்று அதனைத் தேவைப்படுத்துகின்ற சொல்லப்பட்ட கம்பனியின் எவரேனும் கடன்கொடுநருக்கு அல்லது உதவுதொகை செலுத்துநருக்கு அதற்காக விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின் மீது கீழே கையொப்பமிட்டவரினால் கொடுத்துதவப்படும்.

மாலின் ராஜபக்ச.
மனுதாரருக்கான சட்டத்தரணி.

இல. 156 - 1/5,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.

**குறிப்பு**: சொல்லப்பட்ட மனுவின் கேட்பின் போது தோன்றுவதற்கு உட்கருதுகின்ற எவரேனுமாள், அவ்வாறு செய்வற்கான அவரது உட்கருத்துப் பற்றிய எழுத்திலான அறிவித்தலை சட்டத்தரணி மாலின் ராஜபக்ச அவர்களுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அல்லது அஞ்சலின் மூலம் அனுப்புதல் வேண்டும். அறிவித்தலானது, ஆளின் பெயரையும், முகவரியையும் அல்லது குழுமமொன்றாயின் குழுமத்தின் பெயரையும் முகவரியையும் குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாளினால் அல்லது அக்குழுமத்தினால் அல்லது அவரது அல்லது அவர்களது சட்டத்தரணியினால் (எவரேனுமிருப்பின்) கையொப்பமிடுதலும் வேண்டும். அத்துடன் மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரை, 2022, பெப்புருவரி 07 ஆந் திகதி பிற்பகல் 6.00 மணிக்குப் பிந்தாமல் சென்றடையுமாறு அது சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அல்லது அஞ்சலிலிடப்படுமாயின் அந்நேரத்திற்கு முன்னர் அவரைச் சென்றடையக் கூடிய வகையில் போதிய நேர காலத்துடன் அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

12- 181

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.